## இயல் 6.9 - பின்னங்கள்

பயிற்சி எண் :: 6.9.2.2.C

பின்னங்கள் - மேற்சிந்தனை கணக்குகள் - தநாஅபு பயிற்சி - 1.2.6-7

## பின்னங்கள் - மேற்சிந்தனை கணக்குகள் - தநாஅபு பயிற்சி - 1.2.6-7

6. பின்வரும் குறிப்புகளைப் பயன்படுத்தி நான் யார் எனக் காண்க.

i) என்னுடைய ஒவ்வொரு தொகுதியும் பகுதியும் ஓரிலக்க எண்ணாகும்.

ii) என்னுடைய தொகுதி மற்றும் பகுதியின் கூடுதல் 3 இன் மடங்காகும்.

iii) தொகுதி மற்றும் பகுதிகளின் பெருக்கற்பலன் 4 இன் மடங்காகும்.

கண்டுபிடிக்க வேண்டிய பின்னத்தை $\frac{x}{y}$ எனக் கொள்க.

இரண்டாம் விதிப்படி,

$x + y = 9$ [ 9 என்பது 3-ன் மடங்காகும் ]

$y = (9 - x)$ ___①

மூன்றாம் விதிப்படி,

$xy = 8$ ___② [8 என்பது 4-ன் மடங்காகும்]

$y$ -ன் மதிப்பை சமன்பாடு ① லிருந்து ② -ல் மாற்றீடு செய்கையில்

$x(9 - x) = 8$

$9x - x^2 = 8$

$x^2 - 9x + 8 = 0$

**$x$ -ன் மதிப்பை 1 - எனக் கொள்வோமாயின் மேற்கண்ட சமன்பாடு பூர்த்தியாகிறது.**

$1^2 - 9 \times 1 + 8 = 0$

L.H.S = R.H.S

எனவே $x$-ன் மதிப்பு 1 ஆகும்.

$x$ -ன் மதிப்பை சமன்பாடு ① -ல் மாற்றீடு செய்கையில்

$y = (9 - 1)$

$= 8$

உதாரணங்களின் மூலம் நமக்கு கிடைக்கப் பெற்ற மதிப்பு $\frac{1}{8}$ ஆகும். மேலும் பல விடைகள் இதற்கு சாத்தியமாகும்.

7. $1\frac{1}{3}$ இக்கும் $3\frac{1}{6}$ இடையே உள்ள வேறுபாட்டையும் $4\frac{1}{6}$ இக்கும் $2\frac{1}{3}$ இக்கும் இடையே உள்ள வேறுபாட்டையும் கூட்டுக.

$$= \left(3\tfrac{1}{6} - 1\tfrac{1}{3}\right) + \left(4\tfrac{1}{6} - 2\tfrac{1}{3}\right)$$

$$= \left(\frac{(3 \times 6) + 1}{6} - \frac{(1 \times 3) + 1}{3}\right) + \left(\frac{(4 \times 6) + 1}{6} - \frac{(2 \times 3) + 1}{3}\right)$$

$$= \left(\frac{18 + 1}{6} - \frac{3 + 1}{3}\right) + \left(\frac{24 + 1}{6} - \frac{6 + 1}{3}\right)$$

$$= \left(\frac{19}{6} - \frac{4}{3}\right) + \left(\frac{25}{6} - \frac{7}{3}\right)$$

$$= \left(\frac{19}{6} - \left[\frac{4 \times 2}{3 \times 2}\right]\right) + \left(\frac{25}{6} - \left[\frac{7 \times 2}{3 \times 2}\right]\right)$$

$$= \left(\frac{19}{6} - \frac{8}{6}\right) + \left(\frac{25}{6} - \frac{14}{6}\right) = \frac{19 - 8}{6} + \frac{25 - 14}{6}$$

$$= \frac{11}{6} + \frac{11}{6} = \frac{11 + 11}{6} = \frac{22}{6} = \frac{\cancel{22}^{\,11}}{\cancel{6}_{\,3}} = \frac{11}{3} =$$

$$3 \overline{)\,11\,} \quad \text{quotient } 3,\; 9,\; \text{remainder } 2$$

$$= 3\tfrac{2}{3}$$

$1\frac{1}{3}$ க்கும் $3\frac{1}{6}$ இடையே உள்ள வேறுபாடு $4\frac{1}{6}$ க்கும் $2\frac{1}{3}$ க்கும் இவ்விரண்டிற்கும் இடையே உள்ள வேறுபாட்டின் கூடுதல் $3\frac{2}{3}$ ஆகும்.


## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 26th April, 2022 :: 15:58 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally **well permitted.** However, doing so for commercial purpose(s) is/are **strictly prohibited.**